திரு. ரா. உமாநாத்: மரத்தடியில் வோட்டர்கள் இருப்பதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் உள்ள பிரச்சினை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறுகள் நடந்திருக்கலாம். நான் ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் முறையாகக் கொண்டு வாருங்கள். பட்ஜெட் விவாதத்தில் இதையெல்லாம் வைத்தால் சரியாக வராது.

திரு. ரா. உமாநாத்: ஹோல் பிராசஸ் பற்றி விவாதிக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நடந்த தேர்தல் முறையைப் பற்றி நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்? எலெக்ஷன் பெடிஷன் மீதுதான் இதையெல்லாம் பற்றி டிஸ்கஸ் செய்வார்கள். (குறுக்கீடு)

Thiru R. UMANATH: A discussion shall be permitted on this important issue. Unfair methods have been adopted. I am not saying about the Candidates problem.

(குறுக்கீடு) அதைப்பற்றி பொதுவாக ஜனங்கள் மத்தியிலே தவறான கருத்து உருவாகியிருக்கலாம். நான் இந்த டிஸ்கஷன் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 மணிக்கு மேல் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். அதிலே வேண்டுமானா பேசி முடிவு எடுக்கலாம். நோட்டீஸ் கொடுங்கள்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியில் தண்டலம் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துகொண்ட வன்முறையாளர்களை . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி 54 விதியின் கீழ் ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அது வரும்போது பேசிக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி: முதலில் 54-ல் கொடுத்திருக்கிறார்கள் அதுதிரும்பவும் வந்துவிட்டது. (குறுக்கீடு) மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம்: நான் திரும்பவும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55-ல் கொடுத்திருக்கிறார்கள். நான் கூப்பிட்டு விதி 54-ன் கீழ் கொடுங்கள் என்று சொன்னேன். விதி 54-ன் கீழ் எடுத்துக்கொள்வதை பற்றி பரிசீலிக்கலாம்.

(இ) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்— திருவண்ணாமலை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டு வியாபாரம் நடைபெறாமல் தேங்கிக் கிடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி விதி 54-ன் கீழ் கொடுங்கள். அதை எடுத்துக்கொள்ளலாம்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) (சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்முடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்